திரூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1956-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. உப்பி சாகெப் அவர்கள் 11—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

சைதாப்பேட்டைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஏ. எஸ். துரைசாமி ரெட்டியார் அவர்கள் 18—5—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தியாகராயநகர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. காஞ்சி மணிமொழியார் அவர்கள் 7—6—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

பாலக்காடு, முஸ்லிம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவையில் 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஹைட்ரஸ் அவர்கள் 5—7—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

உளுந்தூர்பேட்டைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திருமதி ஏ. மனோன்மணி அம்மாள் அவர்கள் 12—7—1972-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) பூட்டான் நாட்டின் மன்னர் திரு. ஜிக்மி டோர்ஜி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம் நாட்டுடன் நட்புரிமையோடு இருந்து வரும் நமது அண்டை நாடான பூட்டான் நாட்டின் மன்னர் திரு. ஜிக்மி டோர்ஜி அவர்கள் 21—7—1972-ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 9]

மறைந்த மன்னருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Education Reforms Committee

* 1. *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether an Education Reforms Committee headed by Dr. Paul was constituted by the Government; and

(*b*) if so, whether the report has been received from the Committee?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். இந்த அறிக்கையின் பரிந்துரைகள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின் பரிந்துரைகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதை நான் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கை பொதுத் துறை, நிதித் துறை, சட்டத் துறை ஆகியவற்றினால் ஆராயப்பட்டு, இந்தத் தொடர்க் கூட்டத்தில் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்தத் தொடர்க் கூட்டத்தில் அது வைக்கப்பட இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சர்க்கார் செலவிடக்கூடிய பணம் சரியான முறையில் செலவிடப்படவில்லை, அதனுடைய பலன் சரியான முறையில் இல்லை என்று சர்க்காருக்கு எதிராக (அட்வெர்ஸ்) அந்த ரிபோர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், இதை நிவர்த்திக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுப்பார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கைக்கும் அந்த அறிக்கைக்கும் சம்பந்தம் இல்லை. இது, பள்ளிகளில் பணி